20th April 1959]

Works Industrial Co-operative Society which is one of the institutions started for the benefit of Harijans, with assistance from the Government.

(*b*) The Society was registered on 11th March 1957.

(*c*) It is still functioning in Ranipet.

(*d*) No loan has been given. Only a sum of Rupees five thousand three hundred has been given as grant.

(*e*) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : மூன்று மாதங்களுக்கு முன்னால் அரசாங்க உதவி பெற்று நடத்தப்படக்கூடிய இன்டஸ்ரியல் எஸ்டாபிளிஷ்மெண்டு பற்றிய ஒரு ஸ்டேட்மெண்டு மேஜையின்மீது வைக்கப்பட்டது. அதில் ஆனந்தம் சோப் பாக்டரி என்று ஒரு பாக்டரி நடப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது உருப்படியாகக் நடக்கவில்லை. அதன்பேரில் என நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்டபொழுது, கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதனால்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. மேஜையின்மீது வைக்கப்பட்ட அந்த ஸ்டேட்மெண்டில் அம்மாதிரி ஒரு பாக்டரி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தது. ஆகவே, அம்மாதிரி ஒரு பாக்டரி இருக்கிறதா, இல்லையா என்று இப்பொழுதாவது அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஊரைத்தான் கொஞ்சம் தப்பாக நினைத்துவிட்டார்கள். குடியாத்தத்திலே இல்லை, ராணிப்பேட்டையில் இருக்கிறது என்று சொன்னேன்.

Government lands for growing coffee and tea

*23 *Q* —Sri V. K. KOTHANDARAMAN :—கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எந்தெந்த ஜில்லாக்களில் காப்பித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் பயிரிடப்படுவதற்காக சர்க்கார் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை ஏக்கர் அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

(இ) எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரையில் ?

(ஈ) எந்த நிபந்தனைகளின் பேரில் மேற்படி நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) to (*d*) Do not arise.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், வெள்ளைக்காரன் ஆட்சி காலத்திலிருந்தே 90 வருஷத்திற்கு எட்டு அணா வீதம் காபி, டீ முதலியவை பயிரிடுவதற்கு அக்ரிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்பட்ட அக்ரிமென்ட் இந்த வருடத்தோடு முடிவடைகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அவ்விதம் இருந்தால் இப்போது இதன் மூலம் எடுக்கப்பட்ட இடங்களில் எல்லாம் சர்க்காரே காப்பி, டீ முதலியவை பயிரிடுவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொள்ளாச்சி தாலுகாவில் 31 ஆயிரத்தி சில்லரை ஏக்கரும் வேறு ஒரு இடத்தில் 11 ஆயிரத்தி சில்லரை ஏக்கரும் காப்பி, டீ பயிரிடுவதற்காக அஸைன் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு மூன்று ரூபாய், அரை ரூபாய் 62 நயாபைஸா என்று வசூலிக்கப்பட்டுவருகிறது. இதை தவிர வேறு ஒரு இடத்திலும் இப்போது எடுக்கவில்லை என்றுதான் தெரிகிறது.

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவில் கூடலூர் தாலுகாவில் ஆப்டர்லோனிவ் ரிசர்வ் என்ற இடத்தில் சுமார் 3,000 ஏக்கர் வெள்ளைக்காரர்களுக்கு 99 வருடத்திற்கு கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த காலாவதி முடிவடையப்போகிறது. ஆகவே அந்த தோட்டங்களை சர்க்கார் எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்ய சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : சில ஜில்லாக்களில் இருக்கும் தோட்டங்களை ரப்பர், தேயிலை, காப்பி போன்றவைகள் பயிரிடுவதற்காக தனிப்பட்ட நபர்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில இடங்களில் ரப்பர் பயிரிடுவதற்கு கேட்கிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் சுமார் 3,000 ஏக்கர் வரையுள்ள இடத்தில் அரசாங்கமே நேரடியாக நடத்துவதற்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

College Education for the students passing out of the post-basic schools

* 21 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போஸ்ட் பேஸிக் பள்ளிகளிலிருந்து தேறிய மாணவர்களின் மேல் படிப்புக்கு அதே ஆதாரக் கல்வி முறையில் கல்லூரிகளில் படிக்க அரசாங்கம் ஏதேனும் திட்டமிட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No, Sir. The admission of students of post basic schools into colleges for Higher education and provision of collegiate education on the basic pattern are matters for the University to decide. It is learnt that the Universities are considering this matter at the Inter-University level.

SRI A. VEDARATHNAM : இப்போது போஸ்ட் பேஸிக் பயிற்சியில் தேறிய மாணவர்கள் மேற்படிப்புக்கு போவதற்கு வசதியில்லாத முறையில் இருக்கிறது. ஆகவே இதற்காக அரசாங்கம் புதிதாக 5 பள்ளிக்கூடங்களை இந்த ஆண்டில் திறப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போதே அதற்கு வசதி செய்யவேண்டும். அதற்கான வேலைகளை செய்வதற்காக யூனிவர்ஸிட்டியை தூண்டிவிட்டு வேலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்லூரிகளில் மேற்படிப்பு படிப்பதற்கு ஆதரவு கல்வி அவசியமில்லை. இப்போது நம்முடைய குறிக்கோள் போஸ்ட் பேஸிக் பரீட்சையில் தேறியவர்களை மற்ற மாணவர்களோடு கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதைப்பற்றி இன்டர் யூனிவர்ஸிட்டி போர்டு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.